©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.00 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 122A] சென்னை, வியாழக்கிழமை, மே 10, 2012
சித்திரை 28, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## பகுதி IV—பிரிவு 1

பமிள்மிணு டண்தயுவிடீழுச½

### பொருளடக்கம்

*பக்கங்கள்*

**சட்டமுன்வடிவுகள் :**

எண் 25/2012—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் .. 2–6

எண் 26/2012—இந்திய முத்திரை (தமிழ்நாடு மூன்றாம் திருத்தச்) சட்டம் .. 7–8

எண் 27/2012—இந்திய முத்திரை (தமிழ்நாடு நான்காம் திருத்தச்) சட்டம் .. 9–10

2012—ஆம் ஆண்டு மே திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

***சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2012.***

## *2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.*

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தில், 2—ஆம் பிரிவில், (4)—ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் 32/2006.

''(4—A) ''வரிக்கணிப்பு'' என்றால் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்பட்ட வரிக்கணிப்பு ஒன்று எனப்பொருள்படும்; மற்றும் இது மறு வரிக்கணிப்பு அல்லது வரிக்கணிப்பின் சீராய்வு ஒன்றையும் உள்ளடக்கும்;''.

21—ஆம் பிரிவு மாற்றி அமைக்கப்படுதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 21—ஆம் பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**''21. விவரவுரைகளைத் தாக்கல் செய்தல்.—** இந்தச் சட்டத்தின்படி பதிவு பெற்ற வணிகர் ஒவ்வொருவரும் வகுத்துரைக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக மொத்த மற்றும் வரிவிதிக்கத்தக்க விற்பனைத்தொகையைக் காட்டுகின்ற வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில், வகுத்துரைக்கப்பட்ட முறையில், வகுத்துரைக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வரியைச் செலுத்தியதற்கான சான்றுடன் விவரவுரையைத் தாக்கல் செய்தல் வேண்டும். இந்தப் பிரிவின்படியான வரியானது, விவரவுரையைத் தாக்கல் செய்வதற்கான வகுத்துரைக்கப்பட்டவாறான கால அளவின் கடைசி தேதியன்று அந்த வணிகரால் கேட்பு அறிவிப்பு எதுவுமின்றி கொடுபடவேண்டியதாதல் வேண்டும்.''.

22—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 22—ஆம் பிரிவில்,—

(1) ஓரத்தலைப்பிற்கு பதிலாக, பின்வரும் ஓரத்தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் மற்றும் வரிக்கணிப்பு அதிகார அமைப்பால் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை.'';

(2). (2)—ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2) வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது வணிகரால் அந்த ஆண்டுக்கு பணிந்தனுப்பப்பட்ட விவரவுரைகள், வகுத்துரைக்கப்பட்ட படிவத்திலும் அதனுடன் வகுத்துரைக்கப்பட்ட ஆவணங்களும் மற்றும் வரி செலுத்தியதற்கான ஆதாரச் சான்றும் இணைக்கப்பட்டிருக்குமானால், வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது அந்த விவரவுரைகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய வணிகர் ஒவ்வொருவரும் அந்த ஆண்டிற்காக, அடுத்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31—ஆம் நாளன்று வரிக்கணிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

***வரம்புரை:*** ஆனால், 2006—2007, 2007—2008, 2008—2009, 2009—2010, 2010—2011 ஆகிய ஆண்டுகளுக்காகப் பணிந்தனுப்பப்பட்ட, வரிக்கணிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்படாத, அத்தகைய விவரவுரைகளைப் பொறுத்த அளவில், அவை 2012—ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30—ஆம் நாளன்று வரிக்கணிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.'';

(3). (4)—ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(4) வணிகரால் அந்த ஆண்டின் கால அளவு எதற்காகவும் விவரவுரை எதுவும் பணிந்தனுப்பப்படவில்லையானால், அல்லது தாக்கல் செய்யப்பட்ட விவரவுரையானது முழுமைபெறாத ஒன்றாக அல்லது சரியற்றதாக இருப்பின் அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஆவணங்கள் எதனுடனும் அல்லது வரி செலுத்தியதற்கான ஆதாரச் சான்றுடனும் விவரவுரையானது இணைக்கப்படாமல் இருக்குமானால், வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது தேவையானதெனக் கருதும் அத்தகைய விசாரணையைச் செய்ததற்குப் பின்பு, தனது சிறந்த ஆய்வறிதிறனால், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்த ஆண்டு நிறைவுற்றதற்குப் பின்பு, அவ்வணிகருக்கான வரிக்கணிப்பினைச் செய்தல் வேண்டும்:

***வரம்புரை:*** ஆனால், இந்த உட்பிரிவின்படியான நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னதாக, அவர் தம் தரப்பை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று அந்த வணிகருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.'';

(4). அதன் பின்வரும் வரம்புரை உள்ளடங்கலான (5)—ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் வரம்புரையும் விளக்கமும் உள்ளடங்கலான உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(5). (4)—ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட வரிக்கணிப்புக்குக் கூடுதலாக, வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது, (4)—ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட வரிக்கணிப்பு ஆணையில் அல்லது தனிப்பட்ட ஆணை ஒன்றின் வாயிலாக, தண்டத்தொகை என்ற வகையில், கணிக்கப்பட்ட வரி மற்றும் விவரவுரைகளின்படி ஏற்கனவே செலுத்தப்பட்ட வரி ஆகியவற்றின் வேறுபாட்டில் நூற்றுக்கு நூற்று ஐம்பது விழுக்காடு என்பதான தொகை ஒன்றைச் செலுத்துமாறு அந்த வணிகரைப் பணித்தல் வேண்டும்:

***வரம்புரை:*** ஆனால், இந்த உட்பிரிவின்படியான தண்டத்தொகை எதுவும், வரிக்கணிப்பு ஆணையின் தேதியில் இருந்து ஆறு ஆண்டு கால அளவுக்குப் பின்பு மற்றும் பாதிக்கப்பட்ட அந்த வணிகருக்கு அத்தகைய வரிவிதிப்பிற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி விதிக்கப்படுதல் கூடாது.

***விளக்கம்.—*** இந்த உட்பிரிவின்படி தண்டத்தொகை விதிக்கும் நோக்கத்திற்காக, (4)—ஆம் உட்பிரிவின்படி கணிக்கப்பட்ட வரியிலிருந்து பின்வரும் விற்பனைத்தொகைகளின் வகைகள் மீது கணிக்கப்பட்ட வரியானது கழித்துக்கொள்ளப்படுதல் வேண்டும்:—

(i) திட்டவட்டமாக மறைக்கப்பட்ட விற்பனைத்தொகை எதனையும் கருத்தில் கொள்ளாது வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் செய்யப்பட்ட விவரவுரைகளின்படியான விற்பனைத்தொகைக்குச் சேர்க்கைகளைக் காட்டும் விற்பனைத்தொகை எதுவும்;

(ii) விவரவுரைகளின்படி திட்டவட்டமாக மறைக்கப்பட்ட விற்பனைத்தொகை எதனையும் கருத்தில் கொண்டு வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் மதிப்பிடப்பட்ட விற்பனைத்தொகை எதுவும்;

(iii) விளம்புகை எதனையும் அளிப்பதற்கான நிபந்தனைக்குட்பட்டு ஆனால், வரிக்கணிப்பின்போது அத்தகைய விளம்புகையானது அளிக்கப்பட இயலாதிருக்குமிடத்து எந்த விற்பனைத்தொகையின் மீது சலுகை வீதத்தில் வரி செலுத்தப்பட்டதோ அந்த விற்பனைத்தொகை எதுவும்.''.

25–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 25–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(1) இந்தச் சட்டத்தின்படி வரிச்செலுத்தும் கடப்பாடுள்ள வணிகர் எவரும் வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக, விவரவுரையை பணிந்தனுப்பத் தவறுவாறானால் அல்லது அவரால் பணிந்தனுப்பப்பட்ட விவரவுரையானது முழுமை பெறாததாகவோ அல்லது சரியற்றதாகவோ வரிக்கணிப்பு அதிகார அமைப்புக்குத் தோன்றுமானால், வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது, அது தேவையெனக்கருதும் அத்தகைய விசாரணையைச் செய்த பின்பு, தனது சிறந்த ஆய்வறிவுத்திறனில் அந்த வணிகர் செலுத்தவேண்டிய வரியைத் தற்காலிகமாகத் தீர்மானிக்கலாம்.

27–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 27–ஆம் பிரிவில்,–

(1). (1)–ஆம் உட்பிரிவில்,–

(i). (a) எனும் கூறில், “வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட வரிக்கணிப்பு ஆணையின் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “வரிக்கணிப்புத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii). (b) எனும் கூறில், “ வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட வரிக்கணிப்பு ஆணையின் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள்” என்னும் சொற்றொடருக்கு பதிலாக, “வரிக்கணிப்புத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (2)–ஆம் உட்பிரிவில், “வரிக்கணிப்பு ஆணையின் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “வரிக்கணிப்புத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

28–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 28–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், “வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் வரிக்கணிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “வரிக்கணிப்புத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

40–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** முதன்மைச் சட்டத்தின் 40–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரையில், “வரிக்கணிப்பு ஆணையின் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “வரிக்கணிப்புத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

53–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 53–ஆம் பிரிவில்,–

(1). (1)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாகப், பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(1) இணை ஆணையர் தாமாகவே முற்பட்டு, 22–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் வரிக்கணிப்பு எதனையுமோ அல்லது 22–ஆம் பிரிவின் (4), (5) மற்றும் (6) ஆகிய உட்பிரிவுகளின்படி அல்லது பிரிவுகள் 24, 25 மற்றும் 27–ஆம் பிரிவின் (1), (2), (3) மற்றும் (4) ஆகிய உட்பிரிவுகள், 28–ஆம் பிரிவு அல்லது 29–ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றையோ அல்லது உரிய அதிகார அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கை ஒன்றையோ தருவித்துப் பரிசீலனை செய்யலாம் மற்றும் அத்தகைய வரிக்கணிப்பு அல்லது ஆணை அல்லது பதிவு செய்யப்பட்ட நடவடிக்கையானது வருவாய் நலன்களுக்கு ஊறுவிளைவிக்குமானால், அத்தகைய விசாரணையைச் செய்யலாம்; அல்லது அத்தகைய விசரணையைச் செய்ய ஆவன செய்யலாம்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு அத்தகைய வரிக்கணிப்பு அல்லது ஆணை அல்லது நடவடிக்கையைத் திருத்தியமைப்பதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கி, அவர் பொருத்தமெனக் கருதுகிறவாறு, அதன்பேரில் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.”;

(2). (2)—ஆம் உட்பிரிவில், (c) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(c) வரிக்கணிப்புத் தேதிக்குப் பின்பு ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவானது முடிவடைந்துள்ளது:".

**10.** முதன்மைச் சட்டத்தின் 55—ஆம் பிரிவின்,— 55—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). (1)—ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1) கூடுதல் ஆணையர் தாமாகவே முற்பட்டு 22—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் வரிக்கணிப்பு எதனையுமோ அல்லது 22—ஆம் பிரிவின் (4), (5) மற்றும் (6) ஆகிய உட்பிரிவுகளின்படி அல்லது பிரிவுகள் 24, 25 மற்றும் 27—ஆம் பிரிவின் (1), (2), (3) மற்றும் (4) ஆகிய உட்பிரிவுகள், 28—ஆம் பிரிவு அல்லது 29—ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றையோ அல்லது உரிய அதிகார அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கை ஒன்றையோ அல்லது 53—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின்படி அல்லது 54—ஆம் பிரிவின் (3)—ஆம் உட்பிரிவின்படி இணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றையோ தருவித்துப் பரிசீலனை செய்யலாம் மற்றும் அத்தகைய வரிக்கணிப்பு அல்லது ஆணை அல்லது பதிவு செய்யப்பட்ட நடவடிக்கையானது வருவாய் நலன்களுக்கு ஊறுவிளைவிக்குமானால், அத்தகைய விசாரணையைச் செய்யலாம்; அல்லது அத்தகைய விசாரணையைச் செய்ய ஆவன செய்யலாம்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு அத்தகைய வரிக்கணிப்பு அல்லது ஆணை அல்லது நடவடிக்கையைத் திருத்தியமைப்பதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கி, அவர் பொருத்தமெனக் கருதுகிறவாறு, அதன்பேரில் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.";

(2). (2)—ஆம் உட்பிரிவில், (c) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(c) வரிக்கணிப்புத் தேதிக்குப் பின்பு ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவு முடிவடைந்துள்ளது:".

**நோக்க–காரண விளக்கவுரை.**

மாநில நிதி அமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் 2005–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 17–ஆம் நாளன்று வெளியிடப்பட்ட, மாநில அளவிலான மதிப்புக்கூட்டு வரி நிலவரம் மீதான வெள்ளை அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கட்டாயமான வரிக்கணிப்பு இருக்காது என்றும் வணிகரால் பணிந்தனுப்பப்பட்ட விவரவுரைகளின் அடிப்படையின்பேரில் அவர் சுய வரிக்கணிப்பு செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுவார் என்றும் கருதப்பட்டது. எனினும், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 22–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி ஏற்கனவே இருந்து வருகிற வகைமுறைகளின்படி, வரி செலுத்தியதற்கான ஆதாரச் சான்று, வகுத்துரைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை வரி விவரவுரைகளுடன் இணைக்கப்பட்டிருந்தால், வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது, வணிகரால் அந்த ஆண்டுக்கென பணிந்தனுப்பப்பட்ட விவரவுரைகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு ஏற்றுக்கொள்வதன்பேரில், வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது வரிக்கணிப்பு ஆணை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

**2.** பிற மாநிலங்கள் பலவற்றின் மதிப்புக்கூட்டு வரிச் சட்டங்களில், வரிக்கணிப்பு ஆணையினைப் பிறப்பிக்கும் அத்தகைய தேவைப்பாடானது காணப்படவில்லை; மற்றும் அதற்குப் பதிலாக வணிகர்களால் வரி விவரவுரைகள் தாக்கல் செய்யப்படுவதன் பேரில் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது. அதனால் கால வரம்புக்குள்ளாக எந்த நேரத்திலும் வரிக்கணிப்பிலிருந்து தப்பிய வருவாயானது கால விரயமின்றி சீராய்வு முறையின் வாயிலாக மதிப்பிடப்படுகிறது.

**3.** மதிப்புக்கூட்டு வரியின் பொதுவான கோட்பாடுகளுக்கும் பிற மாநிலங்களின் மதிப்புக்கூட்டு வரிச் சட்டங்களில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கும் இணங்கிய வகையில், அரசானது, வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் வரிக்கணிப்பு ஆணை ஒன்று பிறப்பிக்கப்படுவதான, தற்போது இருந்து வரும் நடைமுறையைத் தவிர்த்து விடுவதென முடிவு செய்துள்ளது; மற்றும் இதற்குப் பதிலாக வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் என்பதான முறையை அமைப்பதெனவும் முடிவு செய்துள்ளது. வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் என்பதாகக் கருதப்படும் முறையின்படி விவரவுரைகள் வகுத்துரைக்கப்பட்டவாறு தாக்கல் செய்யப்படுமானால், வணிகரானவர் வரிக்கணிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதாகும். அரசானது 2006–07, 2007–08, 2008–09, 2009–10, 2010–11 ஆகிய ஆண்டுகளுக்கென தாக்கல் செய்யப்பட்ட விவரவுரைகளை, அவை வகுத்துரைக்கப்பட்டவாறு தாக்கல் செய்யப்பட்டிருக்குமானால், 2012–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ஆம் நாளன்று வரிக்கணிப்பு செய்யப்பட்டுள்ளவையாகக் கருதுவதெனவும் முடிவு செய்துள்ளது.

**4.** எனவே, அரசானது இந்நோக்கத்திற்காக 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 32/2006) திருத்துவதென முடிவு செய்துள்ளது.

**5.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*வணிகவரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2012–ஆம் ஆண்டு மே திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2012.**

***1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தை அது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இது இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கபெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் II/1899.

I–ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**2.** 1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் I–ஆம் இணைப்புப்பட்டியலில், 58–ஆம் உறுப்பில், (a) எனும் கூறில், (i) எனும் உட்கூறின் கீழ் அதன் விளக்கத்தில், ''பேரக்குழந்தை'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''பேரக்குழந்தை, சகோதரன் அல்லது சகோதரி'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

1899—ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்திற்கான (மையச் சட்டம் II/1899) I—ஆம் இணைப்புப்பட்டியலின் 58—ஆம் உறுப்பில் வகைசெய்யப்பட்டுள்ள விளக்கத்திற்கு இணங்கிய வகையில், 'குடும்பம்' என்றால் தந்தை, தாய், கணவன், மனைவி, மகன், மகள், பேரக்குழந்தை எனப்பொருள்படும்; மற்றும் நபர் ஒருவரைப் பொறுத்த அளவிலான தனிப்பட்ட சட்டம் மகவேற்பை அனுமதிக்கும் நேர்வில், " தந்தை'' என்பது வளர்ப்புத்தந்தை ஒருவரையும், "தாய்'' என்பது வளர்ப்புத் தாய் ஒருவரையும், "மகன்'' என்பது மகவேற்பு செய்யப்பட்ட மகன் ஒருவரையும் மற்றும், "மகள்'' என்பது மகவேற்பு செய்யப்பட்ட மகள் ஒருவரையும் உள்ளடக்கும். தற்போது அரசானது மேற்சொன்ன சட்டத்திற்கான I—ஆம் இணைப்புப்பட்டியலின் 58—ஆம் உறுப்பின்படி, மேலும் 'சகோதரன்', 'சகோதரி' ஆகியோரையும் 'குடும்பம்' என்ற சொல்லுக்காக வகைசெய்யப்பட்ட விளக்கத்திற்குள் கொண்டுவருவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள்*
*மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2012–ஆம் ஆண்டு மே திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2012.**

***1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தை அது தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்துவதைப்பொறுத்த அளவில் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கபெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் II/1899.

I–ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**2.** 1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் 9–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (b) எனும் கூறில், ''பிற சந்தைபடுத்தத்தக்க பிணையங்கள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''அல்லது இடைத்தரகர் ஒருவரால் அல்லது முகவர் ஒருவரால் அவரது அதிகாரம் அளிக்கும் முதல்வருக்கு அத்தகைய முதல்வரின் பேரிலான கொள்முதல் அல்லது விற்பனையைத் தெரிவிக்கும் குறிப்பு அல்லது குறிப்பாணை'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

1899—ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் (மையச் சட்டம் II/1899) 9—ஆம் பிரிவின், 1—ஆம் உட்பிரிவின், (b) எனும் கூறானது, பிணைகள், கடனீட்டுப்பத்திரங்கள், காப்புறுதிப் பத்திரங்கள், பங்குச் சான்றிதழ்கள் முதலான பலவகையான முறையாவணங்களைப் பொறுத்த அளவில் முத்திரைத்தீர்வையை ஒட்டுமொத்தமாக அல்லது ஒருங்கிணைத்துச் செலுத்துவதற்கு வகை செய்கிறது. தற்போது அரசானது, இடைத்தரகர் ஒருவரால் அல்லது முகவர் ஒருவரால், அவரது அதிகாரம் அளிக்கும் முதல்வருக்கு அத்தகைய முதல்வரின் பேரிலான கொள்முதல் அல்லது விற்பனையை தெரிவிக்கும் குறிப்பு அல்லது குறிப்பாணையைப் பொறுத்த அளவில் முத்திரைத்தீர்வை குறித்து ஒட்டுமொத்தமாக அல்லது ஒருங்கிணைத்துச் செலுத்துவதற்கு வகை செய்வதென முடிவு செய்துள்ளது.

**2.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.